**කොළඹ විශ්ව විද්‍යාලය, ශ්‍රී ලංකාව**

**නීති පීඨය**

නීතිවේදී උපාධි පරීක්ෂණය - සිව්වන වසර - 2019

**බදු නීතිය**

(පැ 03යි)

සම්පූර්ණ ප්‍රශ්ණ සංඛ්‍යාව: 07

ප්‍රශ්ණ **හතරකට (04) පමණක්** පිළිතුරු සපයන්න.

(නොපැහැදිලි අත් අකුරු සඳහා ලකුණු අඩු කෙරේ.)

---

1. අදාළ ව්‍යවස්ථාපිත ප්‍රතිපාදන සහ නඩු තීන්දු නීතිය කෙරෙහි අවධානය යොමු කරමින්, පහත සඳහන් තැනැත්තන්ගේ ආදායම් බදු වගකීම සාකච්ඡා කරන්න.

අ. විදුලි සංදේශ සමාගමක් විසින් මෘදුකාංග උපදේශකවරයෙක් වන විලියම් මහතාව නවතම ජංගම දුරකතන යෙදවුමක් නිර්මාණය කිරීම සඳහා සේවයේ යොදවා ගනු ලබයි. සමාගම ඔහු වෙත ලැප්ටොප් පරිගනකයක්, අනෙකුත් තාක්ෂණික පහසුකම් සහ අවශ්‍ය උපදෙස් ලබා දෙයි. ඔහු විසින් යෙදවුම නිර්මාණය කර අවසන් වන තුරු කාර්යාල වේලාවන්හිදී කාර්යාලයේ සිටීම අවශ්‍ය වන අතර එම කාල පරිච්ඡේදය තුළදී වෙනත් උපදේශන සේවාවන් ලබා දීම සඳහා අවසර නොමැත. සමාගම ඔහුගේ පාරිශ්‍රමික දීමනාවේ කොටසක් ලෙස විලියම් මහතා වෙත මෝටර් රථයක්ද, රියදුරෙකුගේ සේවයද සහ කොටසක මිල රුපියල් 250 බැගින් වූ මුදලකට සමාගමේ කොටස් 500ක් අත්පත් කර ගැනීමේ විකල්පයද ලබා දී ඇත. එකී විකල්ප අවස්ථාවේ සැබෑ වෙළඳපළ වටිනාකම රුපියල් 375,000/-කි.

ආ ශවිතා මහත්මිය විසිතුරු භාණ්ඩ වෙළඳසැලක හිමිකාරියකි. සිය ව්‍යාපාරය වසර දෙකක කාලයක් තුළ වර්ධනය වනු ඇතැයි යන අපේක්ෂාවෙන් ඇය ව්‍යාපාර කටයුතු පුළුල් කිරීම සඳහා නව ප්‍රදර්ශනාගාරයක් මිලට ගනී. දැනට සම්පූර්ණ බිම් ප්‍රදේශයම ඇයට අවශ්‍ය නොවන අතර අතිරේක බිම් ප්‍රමාණය ඇය මල් වෙළඳසැලක් සඳහා කුලියට ලබා දෙයි. ඇයගේ කාරක ප්‍රාග්ධන අවශ්‍යතා ඉක්මවාලන අතිරේක ලාභයක් ඇය උපයන බැවින්, ඇය එම අතිරේක මුදලින් කොටසක් බැංකු ගිණුමක තැන්පත් කර ඉන් පොළියක් ලබා ගනී. ශවිතා මහත්මිය අතිරේකව ඉපැයූ ඉතිරි කොටස භාවිතා කර නේවාසික දේපලක් (residential property) මිලට ගනී. එම දේපළ මිලට ගැනීමට අවශ්‍ය ඉතිරිය ඇය බැංකු ණය මුදලකින් සපයා ගනී. ඇය එම නේවාසික දේපළ කුලියට ලබා දී ඉන් ලැබෙන මුදලින් බැංකු ණය සඳහා පොලිය ගෙවයි.

2. "නිසි ලෙස කෙටුම්පත් කරන ලද බදු නීතියක් එහි ක්ෂේත්‍රය තුළ පවතින කාරණා පිළිබඳව නිවැරදිව දක්වයි. නමුත් නීතියක් සංකීර්ණ සහ තේරුම් ගැනීමට අපහසු වන්නේ නම් එය නිවැරදි වන්නක් නොවේ. බදු නීතියක් තේරුම් ගැනීමට පහසු වන තරමටම, බදු ගෙවන්නන් සහ බදු පරිපාලකයන් යන දෙපාර්ශවයේම අනුකූලතා පාරිවැය (Compliance Cost) අඩු වේ"

("Drafting Tax Legislation, වෙළුම 1 (1996)" වික්ටර් තුරෝනි)

2017 අංක 24 දරන දේශීය ආදායම් පනතේ අන්තර්ගත ව්‍යවස්ථාපිත ප්‍රතිපාදන මගින් කෙතරම් දුරට මෙය අනුගමනය කර ඇත්දැයි යන්න ඉහත ප්‍රකාශය ඇසුරෙන් විවේචනාත්මකව විග්‍රහ කරන්න.

3. ශ්‍රී ලංකාවේ මෘදුකාංග නිර්මාණයෙහි නිරත ප්‍රධාන සමාගමක් වන ABC (පුද්ගලික) සමාගම, එහි සේවා නියුක්තිකයන් වෙත ප්‍රතිලාභ ප්‍රදානය කිරීම සඳහා "පාරිශ්‍රමික භාරය" නම් වූ භාරයක් භාවිත කරයි. සමාගම විසින් අදාළ සේවා නියුක්තිකයා වෙනුවෙන් ඉහත කී භාරය වෙත මූල්‍යමය ගෙවීමක් කරන අතර එම මුදල් අනු භාරයක් (sub-trust) වෙත නැවත ගෙවන ලෙස පාරිශ්‍රමික භාරයේ භාරකරුවන් වෙත නිර්දේශ කරයි. එමෙන්ම එම අනු භාරයෙන් ලැබෙන ආදායම හා ප්‍රාග්ධනය අදාළ සේවා නියුක්තිකයාගේ කැමැත්ත පරිදි යෙදවිය යුතු බවට තව දුරටත් නිර්දේශ කරයි. මේ ආකාරයට සමාගමේ එක් එක් සේවා නියුක්තිකයන් නමින් අනු භාරයන් 75ක් ස්ථාපිත කරයි. අදාළ අනු භාරයන් වෙත ගෙවීම් ලෙස ලැබුණු මුදල දක්වා වූ උපරිමයකට යටත්ව, එම අනු භාරයන් වෙතින් ණය මුදල් ලබා ගැනීමට සේවා නියුක්තිකයන් හට අවසර තිබේ. සේවා නියුක්තිකයන් වෙත විශ්‍රාම වරප්‍රසාද හා ප්‍රසාද දීමනා ලබා දීමේදී ද සමාගම විසින් මෙම ක්‍රම වේදය අනුගමනය කරයි.

ABC (පුද්ගලික) සමාගමේ සේවා නියුක්තිකයෙක් වන ශෙහාන් ප්‍රනාන්දු, සමාගම විසින් පාරිශ්‍රමික භාරය වෙත හා අනු භාරය වෙත කරන ලද ගෙවීම් පිළිබඳව සඳහන් කිරීමකින් තොරව, 2018/19 තක්සේරු වර්ෂය සඳහා සිය බදු වාර්තා ඉදිරිපත් කරයි. කෙසේවෙතත්, දේශීය ආදායම් කොමසාරිස් ජනරාල්වරයා විසින් ඔහුගේ බදු වාර්තාව පිළිබඳව සෑහීමකට පත් නොවන අතර පාරිශ්‍රමික භාරය වෙත කරන ලද ගෙවීම් ඔහුගේ සේවා නියුක්ති ආදායම් ලෙස ඇතුළත්ව වෙනස්කම් සහිතව ඔහු වෙනුවෙන් බදු තක්සේරුවක් නිකුත් කරයි.

2017 අංක 24 දරන දේශීය ආදායම් පනතේ අන්තර්ගත වන බදු මගහැරීමට එරෙහි ප්‍රතිපාදන (anti-avoidance provisions) කෙරෙහි විශේෂ අවධානය යොමු කරමින්, අදාළ ව්‍යවස්ථාපිත ප්‍රතිපාදනයන් හා නඩු තීන්දු නීතිය ආශ්‍රයෙන් ශෙහාන්ගේ ආදායම් බදු වගකීම සාකච්ඡා කරන්න.

4. ගෙවීම පැහැර හරින ලද බදු (tax in default) අයකර ගැනීම සඳහා 2017 අංක 24 දරණ දේශීය ආදායම් පනත යටතේ පුළුල් පරාසයකෙ විහිදුණු ක්‍රම වේදයන් සපයයි. එකී ක්‍රම වේදයන් සැපයීමට අදාළ ව්‍යවස්ථාපිත ප්‍රතිපාදනයන් හඳුනාගෙන එම ප්‍රතිපාදනයන් මගින් බදු ගෙවන්නා කෙරෙහි ඇති කරන බලපෑම අවම කිරීම සඳහා සහ බදු ගෙවන්නන් හා දේශීය ආදායම් කොමසාරිස් ජනරාල්වරයා අතර ඇති බල සම්බන්ධතාව තුලනාත්මක කිරීම සඳහා එකී ප්‍රතිපාදනයන් සංශෝධනය කළ යුතුදැයි නිර්දේශ ඉදිරිපත් කරන්න.

5. 2017 බදු පනත තුළ පහත අයිතමයන් දෙක ඇතුළත් කිරීමට හේතු මොනවාද යන්න කෙරෙහි අවධානය යොමු කරමින්, පහත අවස්ථාවන්ට අදාළ බදු වගකීම විවේචනාත්මකව විග්‍රහ කරන්න.
   - අ ප්‍රාග්ධන ලාභ මත බදු (Capital Gains Tax)
   - ආ ආයෝජන ආදායම

6. මොඩර්න් ටෙක් ලිමිටඩ් යනු දේශීය හා ගෝලීය වෙළඳපල වෙත පරිගණක උපාංග නිපදවන සමාගමකි. එහි වාර්ෂික ආදායම හා ලාභය රුපියල් බිලියන 2.5ක් ලෙස ඇස්තමේන්තු කර ඇත. 2018/19 තක්සේරු වර්ෂය සඳහා මොඩර්න් ටෙක් ලිමිටඩ් හි ආදායම් හා වියදම් ප්‍රකාශය පහත පරිදි වේ.

   - අ කර්මාන්ත ශාලාවෙහි සහ උපකරණයන්හි ක්ෂය වීමේ අගය රුපියල් මිලියන 4.5 ක් වේ.
   - ආ සමාගමේ නිෂ්පාදන ධාරිතාව ව්‍යාප්ත කිරීම සඳහා බියගම ප්‍රදේශයෙන් රුපියල් මිලියන 10 ක් වැය කොට දේපළක් මිලට ගැනීම.
   - ඇ සමාගමේ නිෂ්පාදන වල බුද්ධිමය දේපළ අයිතීන් ආරක්ෂා කර ගැනීම සඳහා රුපියල් 600,000/-ක නීති සහ උපදේශන ගාස්තු ගෙවීම.
   - ඈ කාර්යාලය සොරු බිඳීම නිසා හානියට පත් වූ පරණ සේප්පු වෙනුවට අළුත් සේප්පු දෙකක් මිලට ගැනීමට වැය කළ වියදම ඇතුළු කාර්යාල නඩත්තු වියදම්. එක් සේප්පුවක් සඳහා වැය කළ මිල රුපියල් 75,000/-ක් වේ.

ඉහත කී තක්සේරු වර්ෂය වෙනුවෙන් ගිණුම් සකස් කිරීමේදී අවසරලත් අඩු කිරීම් වන්නේ මොනවාදැයි මොඩර්න් ටෙක් ලිමිටඩ් වෙත උපදෙස් ලබා දෙන්න. ඔබගේ පිළිතුර අදාළ අධිකාරීන් සමගින් තහවුරු කළ යුතුයි.

7. කොටස් දෙකටම පිළිතුරු සපයන්න.

අ තක්සේරුව වෙනස් කිරීම සඳහා තක්සේරුකරුවෙකු වෙත ඇති බලය නිසා බදු ගෙවන්නන්ගේ අයිතිවාසිකම් වෙත ඇති කරන බලපෑම පිළිබඳව අදහස් දක්වමින්, 2017 අංක 24 දරණ දේශීය ආදායම් පනතේ බදු වාර්තා ගොනු කිරීම සම්බන්ධයෙන් වන ප්‍රතිපාදනයන් ඇගයීමට ලක් කරන්න.

ආ 2017 අංක 24 දරණ දේශීය ආදායම් පනතේ වන අභියාචන කාර්ය පටිපාටිය පිළිබඳව, එම පටිපාටිය මගින් බදු එකතු කිරීමේ අරමුණු ඉටු කරගැනීම සඳහා පහසුකම් සැලසීමක් සිදුවන්නේද යන දෘෂ්ටිකෝණයෙන් යුක්තව, අදහස් දක්වන්න.

# கொழும்புப் பல்கலைக் கழகம், இலங்கை

## சட்டபீடம்

## சட்டமாணிப் பரீட்சை – ஆண்டு IV, 2019

## வரிச்சட்டம்

(மூன்று மணித்தியாளம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

<u>ஏவையேனும் நான்கு</u> வினாக்களுக்கு <u>மட்டும்</u> விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்)

---

01. பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் நபர்களின் வருமான வரிப் பொறுப்புக்களை ஆராய்க:

   a. தொலைத்தொடர்பாடல் கம்பனியொன்று புதியதொரு கைத்தொலைபேசிப் படிகேற்றத்தினை (Mobile application) வடிவமைப்பதற்கு மென்பொருள் ஆலோசகரான திரு.வில்லியம் என்பவரை ஈடுபடுத்தியது. குறித்த சேவையை ஆற்றுவதற்காக ஒரு மடிக்கணனி, வேறு தொழில்நுட்ப வசதிகள் மற்றும் தேவையான அறிவுறுத்தல்கள் என்பன கம்பனியால் வழங்கப்பட்டன. அவர் குறித்த பணியானது முடிவடையும் வரை அலுவலக நேரத்தில் கம்பனியில் இருக்குமாறு வேண்டப்பட்டதுடன் குறித்த காலப்பகுதியில் வேறு ஆலோசனைச் சேவைகளை ஆற்றுவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது. கம்பனியானது, திரு.வில்லியத்தின் ஊதியக் கொடுப்பனவின் பகுதியாக மோட்டார் வண்டியொன்றும், அதற்கான சாரதி சேவை மற்றும் குறித்த கம்பனியின் 500 பங்குகளை ஒரு பங்கு தலா ருபா.250/= க்குக் கொள்வனவு செய்யும் தெரிவையும் வழங்கியது. குறித்த தெரிவின் உண்மையான சந்தைவிலை ருபா.375,000/= ஆகும்.

   b. சவித்தா என்பவள் ஆடம்பரப் பொருட்களை விற்பனை செய்யும் கடையொன்றின் உரிமையாளராவாள். அவள், இருவருடகாலத்தில் தனது வியாபாரம் மேலும் வளர்ச்சியடையும் எனும் எதிர்பார்ப்புடன், குறித்த வியாபாரத்தினை விரிவுபடுத்துவதற்காகப் புதியதொரு காட்சி அறையினைக் கொள்வனவு செய்தாள். தற்போது கட்டிடத்தின் அனைத்துத் தளப்பகுதிகளும் தனக்குத் தேவைப்படாததன் காரணத்தால் மேலதிக பகுதியை பூக்கள் விற்பனை செய்யும் கடையொன்றிற்கு வாடகைக்கு வழங்கினாள். அவளின் செயற்பாட்டு மூலதன

தேவைக்கு மேலதிகமாக இலாபங்களை ஈட்டியதன் காரணமாக, சில மேலதிக நிதிகளை வங்கியில் வைப்புச்செய்ததுடன் அவ்வைப்பின் மூலமாக வட்டித்தொகையையும் பெற்றாள். சவித்தா அவளிடம் மீதமாகவுள்ள மேலதிக நிதியினைப் பயன்படுத்தி குடியிருப்பு ஆதனமொன்றைக் கொள்வனவு செய்தாள். குறித்த ஆதனத்திற்கான மிகுதிக் கொடுப்பனவினை வங்கிக் கடனொன்றின் மூலம் பெற்றாள். அவள் குறித்த வங்கிக்கடனுக்கான வட்டியினை குடியிருப்பு ஆதனத்தின் மூலம் பெற்ற வாடகை மூலம் செலுத்தினாள்.

02. “சிறப்பாக வரையப்பட்ட வரிச்சட்டமானது தனது வரம்பிற்குற்பட்ட விடயங்களை துல்லியத்துடன் எடுத்தியம்பும். ஆனால் துல்லியம் மட்டும் போதுமானதல்ல. சட்டமொன்றானது துல்லியமானதென்பதற்காக சிக்கலானதாகவும் புரிந்து கொள்ள இயலாத தன்மையுடையதாகவும் அமையக்கூடாது. எவ்வளவு இலகுவானதாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக வரிச்சட்டம் உள்ளதோ அந்தளவிற்கு, வரிசெலுத்துனர் மற்றும் வரிநிர்வாகி ஆகிய இருவரது சட்ட இணக்கம் தொடர்பான செலவுகளை அது குறைக்கும்.”

***- (“Drafting Tax Legislation, Vol.1 (1996)” by Victor Thuronyi)***

மேற்போந்த கூற்றினை, 2017ம் ஆண்டின் 24 ம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாட்டுகள் எவ்வளவு தூரம் பின்பற்றப்படுகின்றதென்பதை, விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்க.

03. இலங்கையின் முன்னணி மென்பொருள் வடிவமைப்புக் கம்பனியொன்றான ABC (Pvt) Ltd என்பது தனது பணியாளர்களுக்கு நன்மையளிக்கும் பொருட்டு “Remuneration Trust” எனும் அறக்கட்டளையொன்றினை பயன்படுத்துகின்றது. குறித்த கம்பனியானது பணியாளர் பொருட்டுப் பணத்திலான கொடுப்பனவுகளை அவ்வறக்கட்டளைக்குச் செலுத்தியதுடன் குறித்த தொகையை துணை அறக்கட்டளையொன்றிற்கு மீளச்செலுத்துமாறு குறித்த அறக்கட்டளையின் அறங்காவலர்களுக்குப் பரிந்துரை செய்தது. அத்துணை அறக்கட்டளையின் மூலதனம் மற்றும் வருமானமாகியவை சம்பந்தப்பட்ட பணியாளரின் விருப்பத்திற்கு அமைவாகப் பயன்படுத்தப்பட வேண்டுமெனவும் மேலும் பரிந்துரை செய்தது. இவ்வாறாக கம்பனியால் தனது பணியாளரின் தனிப்பட்ட பெயரில் 75 துணை அறக்கட்டளைகள் நிறுவப்பட்டன. பணியாளர்கள், தமது பொருத்தமான துணை அறக்கட்டளையிலிருந்து செலுத்திய கட்டணத்தின் வரையறைக்குட்பட்ட கடனைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். குறித்த பணியாளர்களுக்கு ஓய்வூதிய நன்மைகள் மற்றும் ஊக்குவிப்பு வெகுமதிகள் வழங்குவதற்கும் அதே பொறிமுறை பயன்படுத்தப்பட்டது.

ABC (Pvt) Ltd இன் பணியாளரொருவரான செகான் பெர்னான்டோ என்பவர் குறித்த அறக்கட்டளை மற்றும் துணை அறக்கட்டளைக்கு செலுத்திய கட்டணங்களைக்

குறிப்பிடாமல் தனது 2018/19ம் வரிமதிப்பீட்டாண்டுக்கான வருமான வரிவிபரத்திரட்டுகளைச் சமர்ப்பித்தார். எனினும் அவரின் வரிவிபரத்திரட்டில் திருப்தியடையாத உண்ணாட்டிறை ஆணையாளர், குறித்த அறக்கட்டளைக்குச் செலுத்திய கட்டணங்களை அவரின் ஊழிய வருமானமெனக் குறிப்பிட்டு அதனை உள்ளடக்கிய திருத்தப்பட்ட வரிமதிப்பீடொன்றினை வழங்கினார்.

2017ம் ஆண்டின் 24ம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் தவிர்த்தலை எதிர்த்தல் (anti-avoidance) தொடர்பான ஏற்பாடுகளை விஷேடமாக குறிப்பிட்டு, பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு செகானின் வருமான வரிப் பொறுப்புக்களை ஆராய்க.

04. 2017ம் ஆண்டின் 24ம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டமானது வரித் தவறுகை (Tax in default) தொடர்பாக பரந்த அளவிலான அறவீட்டு முறைகளை ஏற்பாடு செய்துள்ளது. அறவீட்டு முறைகளை ஏற்பாடு செய்யும் பொருத்தமான ஏற்பாடுகளை இனம்கண்டு கொள்வதுடன் குறித்த ஏற்பாடுகளானவை வரிசெலுத்தினர் மீதான கடினத்தன்மையைக் குறைப்பதாகவும், உண்ணாட்டிறை ஆணையாளர் மற்றும் வரிசெலுத்தினர் என்போருக்கு இடையிலான அதிகாரம் சார்ந்த உறவினை சமப்படுத்தும் தன்மையை உருவாக்குவதற்காகவும் திருத்தப்படலாமா எனவும் பரிந்துரை செய்க.

05. 2017ம் ஆண்டின் வரி நியதிச்சட்டத்தில் பின்வரும் இருவிடயங்களும் உள்ளடக்கப்பட்டதற்கான காரணங்களை முன்னிறுத்துவதன் மூலம் குறித்த இரு வரிப்பொறுப்புக்களையும் விமர்சனரீதியில் மதிப்பீடும் செய்க.

a. மூலதன ஆதாய வரி

b. முதலீட்டு வருமானம்

06. Modern Tech Ltd என்பது உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளிற்கான கணினி உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் கம்பனியொன்றாகும். குறித்த கம்பனியின் ஆண்டு வருமானம் ரூபா.2.5 பில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. Modern Tech Ltd இன் 2018/2019ம் ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கறிக்குக் கூற்று பின்ருமாறு உள்ளது:

i. இயந்திரம் மற்றும் உபகரணங்களிற்கான தேய்மானம் 4.5 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ii. கம்பனியின் உற்பத்தித்திறனை விரிவுபடுத்துவதற்காக 10 மில்லியன் ரூபா செலவில் பியகமவில் ஆதனம் கொள்வனவு செய்யப்பட்டது.

iii. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் புலமைச்சொத்துரிமையைப் பாதுகாக்கும் பொருட்டு ரூபா.600,000/= சட்ட மற்றும் ஆலோசனைக்காக செலவிடப்பட்டது.

iv. அலுவலகம் கொள்ளையர்களால் உடைக்கப்பட்ட போது சேதமாக்கப்பட்ட பழைய இரும்புப் பெட்டிகளிற்குப் பதிலாக புதிதாக கொள்வனவு செய்யப்பட்டவற்றின் பெறுமதியை உள்ளடக்குவதாக அலுவலகப் பராமரிப்புச் செலவுகள் அமைந்திருந்தது. இரும்புப்பெட்டிகளின் விலை ஒவ்வொன்றும் ரூபா.75,000/= எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிட்ட வரிமதிப்பீட்டாண்டிற்கு தனது கணக்குகளை தயாரிக்கின்ற போது அனுமதிக்கப்படக் கூடிய கழிவுகள் தொடர்பில் Modern Tech Ltd க்கு ஆலோசனை வழங்குக. உமது விடையானது பொருத்தமான அதிகாரங்களால் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்

07. இரு பகுதிகளிற்கும் விடையளிக்குக:

i. வரிவிபரத்திரட்டுக்களை (Returns) தாக்கல் செய்தல் தொடர்பில் 2017ம் ஆண்டின் 24ம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளை மதிப்பீடு செய்து, வரிமதிப்பீட்டில் மாற்றம் செய்ய வரிமதிப்பீட்டாளருக்குள்ள அதிகாரங்களானவை வரிசெலுத்தினரின் உரிமை மீது செலுத்தும் தாக்கங்களை கருத்துரை செய்க.

ii. வரி மேன்முறையீடு நடைமுறையானது சட்டத்தின் நோக்கமான வரி அறவிடுதல் என்பதனை எளிதாக்கியுள்ளதா எனும் கண்ணோட்டத்தில் 2017ம் ஆண்டின் 24ம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் வரி மேன்முறையீடு நடைமுறை தொடர்பான ஏற்பாடுகள் மீது கருத்துரைக்க.

-----------------------------------